Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பாண்டியர் கலைபாணியில் உத்தரகோசமங்கை மங்களநாதர் கோயில் கட்டடக்கலை ஓர் ஆய்வு

53

முனைவர் கா.அன்பரசன்
கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத் துறை
ம.இரா.அ.கலைக்கல்லூரி, மன்னார்குடி 614 016.

**ஆய்வு சுருக்கம்**

தமிழ்நாட்டில் செந்தமிழ் நாடு என்று சிறப்பாக அழைக்கப்படும் நாடு பாண்டிய நாடே ஆகும். “தன்னார் தமிழ் அளிக்கும் பாண்டியநாடு” என்றால் மணிக்கவாசகர், “முத்தும் முத்தமிழும் குளித்த நாடு” என பாண்டிய நாட்டின் பெருமையை பறைசாற்றுகிறார் கம்பர். உத்ரகோசமங்கை மிகப்பழமையான சிவத்தலம் என்பதும். “மண்முந்தியோ மங்கை முந்தியோ” என்று தொன்று தொட்டு வழங்கிவரும் பழஞ்சொல்லிருந்து அறியப்படுகின்றன. இத்தலத்தின் தனிச்சிறப்பும் பெருமையும் மணிவாசகர் பெருமானால் “பார்மேல் சிவவுரம் போல்” கொண்டாடும் உத்தரகோசமங்கை என்று பாடியருளி திருவாசகத்தால் நான்கு விளங்குகின்றன. இவ்வாறு பல சிறப்புகளையும் தொன்மைகைளையும் இப்பாண்டியமண்டலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் சாலையில் 15□கிலோ மீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளன.[1]

உத்தரகோசமங்கையில் சுவாமி இறைவிக்கு வேதாகமங்களின் இரகசியத்தை போதித்தால் உத்தர கோசமங்கை என்று அழைக்கப்படுகிறது. உத்தரம் என்பது உபதேசம் கோசம் என்பது இரகசியம் மங்கை என்பது பெண் மங்கேளசுவரி ஆவாள்.

இத்தலமானது திருவாலவாய், திருச்சுழியல், திருபுவனம், திருவாடனை, முதலான பாண்டியத்தலங்கள் பதினான்கும் தோன்றும் முன்னரே ஓர் இலந்தை மரத்தின் அடியிலே சுயம்புவாய் தோன்றியவன் மங்களநாதன்.[2]

1. ஆறுமுகம் பிள்ளை கு,உத்தரகோசமங்கை தலபுராணம், இராமநாதபுரம் ப-16
2. கு. அறிவொளி இராமேஸ்வரம் தலைவர், சென்னை 1959 – 1984 ப-24

சங்ககாலத்தில் அரசனின் மாளிகைகளும், கோயில்களும், மண்டபங்களும் இக்காலத்தைப்போலவே சிற்பநூலறிந்த புலவர்களால் நாள் குறித்து நாழிகைப்பார்த்து திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி உருவாக்கப்பட்டன என்பதை.

ஒரு திறஞ்சாரா விரைநா னமையதீது
நூலறிபுலவர் நுண்ணிதிற் கயிதறிட்டுத்
தே எங்கொண்டு தெய்வ நோக்குப்
பெருமை பெயர் மன்னர்க் கொப்ப மனை வருத்த.

(நெடுநல் 75-78)

என்னும் நெடுநெல்வாடை அடிகளால் அறியலாம்.[1]

இந்தியர்கள் தங்கள் கோயில்களை மலைகளிலும், ஆறு, குளம், கடல், ஏரி ஆகியவற்றின் கரைகளிலும் சோலைகளிலும் கட்டி கலை அழகுடன் இயற்கை அழகையும் இணைத்து மகிழ்ந்து வருகின்றனர். கட்டக்கலையின் தோற்றத்திற்கு வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் உந்து சக்தியாக அமைவது சமய உணர்வேயாகும்.

தொடக்கத்தில் ஒரு மரமும் அதன் கீழ் இறைவன் திருவுவருமும் மட்டுமே இருந்தன. எனினும் காலபோக்கில் அவற்றை சுற்றி எழுப்பப்பட்ட சுவர்களும் மண்டபங்களும், மற்றுமுள்ள கட்டங்களும் இன்று நாம் காணும் அளவிற்கு கவின்பெற வளர்ந்துள்ளன. நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் காடுகளை அழித்து குடிநிறுத்தி கோயில் எடுப்பதும் தமிழர்களின் மரபாகும். மக்களுடைய தேவைகள் எல்லாம் பூர்த்தியடைய வேண்டியும் அரசர்கள் பல கோயில்களை கட்டியுள்ளனர். இவ்வாறு எழுப்பப்பட்ட கோயில்கள் அரசனுடைய பெயருக்கும், புகழுக்கும் பெருமை சேர்க்கின்றன. தாங்கள் அடைந்த வெற்றியின் நினைவாக மன்னர்கள் கோயில்களை கட்டினார்கள்

1. நெடுநல்வாடை பாடல் -75-78

சோழப்போரரசின் மறுமலர்ச்சிக்குக் காரணமான விசயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அங்கு நிசும்பசுதனிக்குக் கோயில் எடுப்பித்ததைக் கல்வெட்டு செய்தி குறிப்பிடுகிறது.[1]

சங்ககாலத் தொடக்கத்திலிருந்த கோட்டங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. பின்னர் கோயில் என்ற பெயருக்கு, நகரம், நியமம், என்ற வேறுபெயர்களும் உண்டு, பலவகையான கோயில்கள் இருந்ததை, அமரர்கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர் வெள்ளைநாகர்தம் கோட்டம் உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்க்கோட்டம், வச்சிரகோட்டம், நிக்கந்தக்கோட்டம், நிலாக்கோட்டம், என சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

சங்காலத்தில், புகார் மதுரை, திருவேகம்பம், திருவனந்தபுரம், அழகர்மலை, திருவரங்கம், திருவேங்கடம், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரவாவினன்குடி, திருவேடகம், பழமுதிர்சோலை, போன்ற இடங்களில் கோயில்கள் அமைந்திருந்தன. இக்கோயில்கள் பிற்காலத்தில் புதுமுறைக்கேற்ப கருங்கற்கல் கொண்ட திருப்பணிகளால் பழமை மறைக்கப்பட்டு புதுமை மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.[2]

1. A.R.E. – 19114 - P-407

2. வி.மு. சுப்ரமணிய அய்யர், உத்தரகோசமங்கை மங்களேசுவரி - ப-24

<u>முன்னுரை</u>

சங்க கால இலக்கியங்களில் இலவந்திகைப் பள்ளி என்ற பெயர்கள் இடம் பெறுகின்றன. இவை இலங்கை என்ற சொல்லில் இருந்து மருவியது என்கிறார் மாணிக்கவாசகர்.

இப்பழம்பெரும் பாண்டிய நாட்டில் இலங்கையை தலவிருட்சமாக கொண்ட பெருந்தவம் வேறெங்கும் இல்லை. எனவே சங்க இலக்கியங்கள் கூறும் இலவந்திகைப் பள்ளி என்பது இவ்வுத்திரகோசமங்கையே ஆகும்.

இலவந்திகைப்பள்ளி பாண்டிய மன்னர்களது அரசிருக்கையாக இருந்து வந்திருக்கிறது. இதற்கு

சான்றாக புறநானூறு 55,56,57 முதலிய பாடல்களில் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறன் என்ற பாண்டிய மன்னனைப் பற்றி நக்கீரனார், மருதனிள நாகனார், காவிரிபூம்பட்டினத்தார்க் கண்ணனார் முதலியன சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர்.

இவ்வூர் முற்காலத்தில் பச்சைப் பசேலேன்றும் பழனங்களையும் நறுமண பூஞ்சோலைகைளயும், வானளாவிய மரங்களையும் வானுயர்ந்த மாடி வரிசைகளையும் பல அற நிலையங்களையும் கொண்டு சிறப்பு வாய்ந்த ஊராக திகழ்ந்து இருக்கின்றன.

இவ்வாறு பல சிறப்புகளையும், தொன்மைகளையும் இப்பாண்டிய மண்டலத்தில் உள்ள இராமநாதபுர மாவட்டத்தில் உத்தரகோசமங்கை கிராமத்தில் அமையவற்ற மங்களநாதர் கோயிலானது, திருவாலவாய், திருச்சுழியல், திருப்பூவணம், திருவாடணை, தேவிபட்டிணம் முதலிய பாண்டிய தலங்கள் பதிளார்க்கும் தோன்றும் முன்னரே ஓர் இலந்தை மரத்தடியில் சுயம்பு மூர்த்தியால் தோன்றிய மங்கை பெருமான்.[1]

1. கு.ஆறுமுகனார், உத்தரகோசமங்கை தலவராலாறு ப-22

<u>இறைவனின் திருப்பெயர்கள்</u>

மங்களநாதன், பிரளயாகேசுரன், துரிதாபன், காட்சிகொடுத்த நாயகன், கல்யாணசுந்தரன், மங்களசுரன், இலவந்திகைநாதன் என்றும் வழங்கி வருவதை கல்வெட்டுச் செய்தி மூலம் இலக்கிய செய்திகள் மூலமாகவும் அறியப்படுகிறது.

<u>இறைவியின் திருப்பெயர்கள்</u>

மங்கேளசுவரி, மங்களதாவினி, புட்பவதி, சுந்தரநாயகி, பூண்புரையாள், கல்யாணசுந்தரி, திரை சேர்மடந்தை என்றும் வழங்கி வகை இலக்கிய செய்திகள் தலபுராணம் மூலமும் அறியப்படுகிறது.

<u>தலவிருட்சமும், தீர்த்தமும்</u>

ஓர் இலந்தை மரத்தனடியிலே சுயம்புவாய் முளைத்த மூர்த்தியாதலால் தலவிருட்சம் இலந்தை மரத்தை கொண்டு அமைந்துள்ளன. இம்மரமானது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மங்களநாதனுக்கு தீர்த்தமாக அக்னிதீர்த்தம், புரம்மதீர்த்தம், இந்திர நாடகம், கௌமார தீர்த்தம், பதும தீர்த்தம், சீதன தீர்த்தம், தேவ தீர்த்தம், அரித்துவச கூபம் ஆகிய தீர்த்தங்கள் புண்ணிய தீர்த்தமாக விளங்குகின்றன.[1]

உத்திரகோசமங்கை ஊரைச்சுற்றி, இராமேஸ்வரம், திருபுல்லாணி, திருவாடனை, தேவிபட்டினம், தனுஸ்கோடி, உப்பூர் வெயிலுகந்த விநாயகர் போன்ற இடங்கள் புண்ணிய ஸ்தலமாகவும், சுற்றுலாத்தலமாகவும் அமைந்துள்ளன.

1. தி.சை.சதாசிவ பண்டனத்தார் பாண்டிய வரலாறு ப-6

இறந்தவர்களை புதைத்தலை பள்ளிபடுத்துதல் என்பர். அவ்விடத்தில் கோயில் எடுப்பது நல்லதாகும். இவற்றுக்கு பள்ளிபடை என்று செயல். இவ்வாறு ஏற்பட்ட பள்ளி படைகள் தமிழகத்தில் அரிதாக காணப்படுகின்றன. காளகத்தி அருகில் உள்ள தொண்டைமாநாடு என்ற ஊரில்

முதலாம் ஆத்தசோழன் இறந்தும் அவ்விடத்தில் அவர் மகன் பராந்தக சோழன் பள்ளிப்படையாக ஒரு கோயிலை எழுப்பி திருநெல்வேலி என்ற கோனேரிராசுபுரத்தில் கண்டரபதித்தன் நினைவாக மனைவியாள் செட்டியின் மாதேவி ஒருப் பள்ளி பாடலை எழுப்பினார்.

<u>பாண்டியர்களின் கட்டக்கலைக் கூறுகள்</u>

1. இவை நடுத்தர அளவில் அமைந்தவை, விமானம் ஒன்று, இரண்டு அல்லது மூன்று தரளங்கள் கொண்டு அமைந்திருக்கும், சுமார் 20 அல்லது 30 அடி உயரம் இருக்கும் உயர்ந்த விமானங்கள் வழக்கில் இல்லை.
2. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் கொண்டவையாக இருக்கும், வெளிக்கோபுரங்களோ, பெரிய மண்டபங்களோ கிடையாது.[1]
3. கல்லாலான விமானத்தில் கூடம், சாலை, பஞ்சரம் போன்ற அங்கங்கள் கொண்ட ஹார வரியையும் அழகிய சிறப்பங்களையும் காணலாம்.
4. பொதுவாக கீரீவமும், சிகரமும் சதுரவடிவோ (நாகரபாணி) எண்கோன (திராவிட) வடிவிலோ அமைந்திருக்கும்.[2]

1. G.Jouvearu – Dubreuil, Dravidian Architecture P -22 -25
2. T.A.Gopinatha Rao-Element of Hindu Iconography - P - 74
   Vol II

5. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் தொண்டை மண்டலத்தில் வழக்கிலிருந்த தூங்கானை மாடக் கோயில்கள் அல்லது கறுபிருஷ்ட விமானம் பாண்டிய நாட்டில் இல்லை.
6. பல்லவர்களால் கையாளப்பட்ட அஷ்டாங்க விமானம் பாண்டிய நாட்டிலும் காணப்படுகிறது.

இது போன்ற பாண்டிய மன்னர்கள் பல இடங்களில் கருங்கற்களைக் கொண்டு கட்டுமானக் கோயில்களை அமைத்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறுங்குடி | - | நம்பிகோயில் |
| 2. | உக்கிரன் கோயில் | - | சொக்கலிங்கேஸ்வரர் கோயில் |
| 3. | கோவில்பட்டி | - | பூவணநாத சுவாமி கோயில் |
| 4. | திருப்பத்தூர் | - | திருதளிநாதர் கோயில் |
| 5. | அம்பாசமுத்திரம் | - | திருமூலநாதர் கோயில் |
| 6. | ஏனாதி | - | சிவன் கோயில் |
| 7. | மன்னார் கோயில் | - | கோபாலசுவாமி கோயில் |
| 8. | திருவாலீஸ்வரர் | - | வாலீஸ்வரர் கோயில் |
| 9. | கோவில் குளம் | - | தென்னழகர் கோயில் |
| 10. | விஜயநாராயணண் | - | மனோன்மணீசுவரர் கோயில் |
| 11. | சீவலபேரி | - | அழகர் கோயில் |

12. உத்தரகோசமங்கை - உமா மகேஸ்வரர் கோயில்
13. மதுரை - கூடல் அழகர் கோயில்
14. திருக்கோட்டியூர் - சௌம்பிய நாராயண பெருமாள் கோயில்
15. திருமாலிருஞ்சோலை - அழகர் கோயில்
16. ஸ்ரீ வில்லிபுத்தூர் - வடபத்ரசாயி கோயில்
17. கோட்டைக் கருங்குளம் - இராசசிம்மேசுவரர் கோயில்
18. சின்னமனூர் - லட்சுமி நாராயணர் கோயில்
19. பெருங்குளம் - திருவழுதீசுவரர் கோயில்
20. குற்றாலம் - குற்றாலநாதர் கோயில்

மேலே குறிப்பிட்டுள்ள கோயில்கள் சுமார் கி.பி. 800 முதல் 950 வரையுள்ள பாண்டியரது காலத்தில் இக்கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன

மங்களநாதர் கருவரை

மங்களநாதர் கருவரையானது 17 அடி நீளமும், 17 அடி அகலமும் கொண்டு சதுரமான அமைப்பில் அமைந்துள்ளது.[1]

அதிட்டானம்

உபானம், ஜகதி, கண்டம், முப்பட்டை குமுதம், கால், அக்கர பட்டிகை,கால், கபோதம், கூடுவுரைத் தூண்களில் வேதிகை, நாகபந்தம், கால், பத்மபந்தம், கலசம், தடி, குடம், இதழ், முனை, பலகை, போதிகை, உத்திரம், கொடுங்கை காணப்படுகின்றன. இதுபோன்ற அதிட்டானம் அமைப்பு, பிற்கால பாண்டியர் கோயிலான கரிவலம் வந்த நல்லூர் ஸ்ரீ பால் வண்ணநாதர் கோயியில் அமைந்துள்ளன.கட்டக் கலை கூறுகைளக் கொண்டு பார்க்கும் போது கி. பி. 13-ம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 15ம் நூற்றாண்டு வரை கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

1. கே.ஆர்.சீனிவாசன், தென்னிந்திய கோயில்கள் ☐ U - 56 - 57

சுவர் பகுதி

கருவறை சுவர்ப்பகுதியில் அரைத் தூண்கள் காணப்படுகின்றன. இரண்டு அரைத்தூண்களுக்கு இடையில் கோஷ்ட பஞ்சரம், கும்ப பஞ்சரம் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் அமைந்துள்ளன. கருவரையில் தேவக்கோட்டங்கள் அமைந்துள்ளன். தேவக்கோட்டங்கள் நன்கு வளர்ச்சி பெற்று தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்கை போன்ற படிமங்கள் அமைந்துள்ளன. பாண்டிய மன்னர்கள் கட்டிய கோயிலில் முதன் முதலாக தேவக்கோட்டத்தில் கி.பி. 13ம் நூற்றாண்டில் அருப்புக்கோட்டை சுந்தரேஸ்வரர் கோயிலில் சிற்பம் அமைக்கப்பட்டது. அதனை பின் தொடர்ந்து வந்த பாண்டிய மன்னர்கள் கோயில் அமைக்கும் போது தேவக்கோட்டச் சிற்பங்களை அமைத்துள்ளனர்.

பிரஸ்தரம்

பிரஸ்தரத்தில் கபோதகம் காணப்படுகிறது. கபோதகத்தில் கூடுகள் காணப்படுகின்றன. கூடுகளில் சிவனின் நாட்டிய கோலங்கள் புடைப்பு சிற்பமாக அமைந்துள்ள்து.

முற்கால பாண்டியர்கள் கோயில் கட்டுமானங்களில் தேவக்கோட்டம் காலியாக இருக்கும், அதனை தொடர்ந்து வந்த பிற்கால பாண்டியர்கள் சோழர்களின் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தொடங்கி 17 ஆம் நூற்றாண்டு வரையில் எடுப்பித்த கோயில்களுக்கு தேவக்கோட்டத்தில் சிற்பம் வைத்துள்ளனர்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கி.பி. (1216-35) எட்டாம்ஆட்சியாண்டு கல்வெட்டானது அருப்புக்கோட்டையில் உள்ள சுந்தரேஸ்வரர் கோயிலின் மேற்குபுற தேவக்கோட்டத்தில் முதன் முதலில் லிங்கோத்பவ மூர்த்தியை அமைத்தார் என்று அவருடைய கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இம்மன்னரைப் பற்றிய மற்றொரு கல்வெட்டானது பாண்டிய மன்னன் திரிபுவன சக்ரவர்த்தியின் சுந்தரபாண்டிய தேவனின் பதினைந்தாம் ஆட்சியாண்டு கல்வெட்டானது முடிகொண்ட சோழபுரத்தில் இருக்கும் போது இக்கோயிலின் வடக்குபுறத் தேவக் கோட்டத்தில் துர்க்கையின் படிமத்தை அமைத்தார் என்று குறிப்பிட்டுள்ளது. இக்கோயில் பிற்கால பாண்டியர்களின் கட்டுமானத்தை கொண்டுள்ளதால் தேவக்கோட்டங்கள் நன்கு வளர்ச்சிப் பெற்று சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விமானம்

பல்லவர்களால் கையாளப்பட்ட அஷ்டாங்க விமானம் பாண்டிய நாட்டிலும் காணப்படுகிறது. காஞ்சியில் நந்திவர்மன் எடுப்பித்த வைகுண்ட பெருமாள் கோயிலும் உத்திரமேரூரில் நந்திவர்மன் எழுப்பிய சுந்தராச பெருமாள் கோயிலும் அஷ்டாங்க விமானத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். பாண்டிய நாட்டில் மதுரை கூடலழகர் கோயிலும், திருக்கோட்டியூர் சௌமியநாராயண பெருமாள் கோயில் ம்ற்றும் மன்னார்கோயில் அம்பாசமுத்திரம் போன்ற இடங்களில் காணலாம். கி.பி. 8,9 ஆம் நூற்றாண்டு கட்டுமான வளர்ச்சியில் பெரும் சாதனை புரிந்துள்ளது.

இவ்வகை விமானங்களை பிற்காலத்தில் சோழர் கட்டிய தஞ்சைப் பெரியகோயில் கங்கை கொண்ட சோழப்புரத்திலுள்ள பல அடுக்குகளைக் கொண்ட விமானங்களுக்கு முன்னோடியாக அஷ்டாங்க விமானம் அமைந்தன என்று கருதப்படுகின்றன.

இக்கோயில் உள்ள விமானம் இரண்டு தளங்களைக் கொண்டு அமைந்துள்ளன. நான்கு திசையிலும் நான்கு சிறிய விமானங்களும், சுதை சிற்பங்கள் சிவன், தெட்சிணாமூர்த்தி, பிரம்மா, விஷ்ணு போன்ற படிமங்கள் காணப்படுகின்றன்.அதற்குமேல் கொடுங்கை நீண்ட வடிவில் அமைந்துள்ளன.அதற்கு மேல் நான்கு திசையிலும் நந்திகள் காணப்படுகிறது. அதற்கு மேல் கொடுங்கை காணப்படுகிறது.

கிர்வம்

சிகரத்திற்கு கீழ்பகுதியில் உள்ளடக்கி (கழுத்து) போன்று அமைந்துள்ளது.

சிகரம்

நான்கு பட்டையாகக் கொண்ட நாகரா பணியில் சிகரம் அமைந்துள்ளன.

ஸ்தூபி

ஸ்தூபி என்பது கலசம் என்று பொருள். இது சதுரமான வடிவில் அமைந்துள்ளது.

கருவறையை தொடர்ந்து அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகப்பு மண்டபம், திருசுற்றுமண்டபம், முதல் பிரகாரம், வாத்திய மண்டபமும் அமைந்துள்ளன. அதனை தொடர்ந்து முதல் இராஜகோபுரமும் 5 நிலைகைள கொண்டு அமைந்துள்ளன. இரண்டாவது கோபுரம் 120□ அடி உயரமும் 70 அடி அகலமும் 45 அடி அகலமும் கொண்டு அமைந்துள்ளன. கோபுரத்தில் சிவனின் திருவிளையாடல்கள் சுதை சிற்பமாக காணப்படுகின்றன.[1]

அதனை தொடர்ந்து சன்னதிகளாக சகஸ்ரலிங்கேசுவரர், மரகதநடராஜர் சன்னதி, உமாமகேஸ்வரர் சன்னதி, மங்கேளசுவரி சன்னதி, மாணிக்கவாசகர் சன்னதியும் அமைந்துள்ளன.

பாண்டியர்களால் கட்டப்பட்ட கோயில்கள் பலவும், விஜயநகர மன்னர்கள், சேதுபததிகள், நகரத்தார்கள காலம்வரையில் பல்வேறு புதிய கட்டடக் கலை இணைப்புகளாக மண்டபங்கள், கோபுரங்கள், பிரகாரங்கள் சுற்றுக் கோயில்கள் என வளர்ச்சிப் பெற்று வந்துள்ளன.

1. K.V.Sowndharajan Family Pandiya, Muthanya Irukkanel Architecture
   P - 240

முடிவுரை

மாறன் என்ற பாண்டி மன்னர் உத்திரகோமங்கையில் அரசாட்சி புரிந்து இறந்துள்ளார். இது சங்க இலக்கிய சாலனை புறநானூறு வாயிலாக அறியப்படுகின்றனர். இது இக்கோயில் மூலவர் கருவறை சுவரில் இலவந்திகைப் பள்ளி என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. இலவந்திகைப்பள்ளி, துஞ்சிய நன்மாறன்[1] இந்த பாண்டிய மன்னர் இறந்த பிறகு சிவனுக்கு நிகராக இப்பாண்டிய மன்னனை ஒப்பிட்டு சங்ககால புலவர்கள் பாடியுள்ளனர். இம்மன்னன் மயிலை கொடியாகவும், யானையை ஊர்தியாகவும் கொண்டுள்ளனர். இக்கோயிலின் இராஜகோபுரத்தின் நுழைவாயிலில் மயில் யானையை தூக்கிசெல்வது போன்று புடைப்புச் சிற்பகமாக வடிக்கப்பட்டுள்ளன. எனவே, இலக்கிய சான்றுகளும், கல்வெட்டுச் சான்றுகளும், படிமக்கலைகூறுகைளயும் கொண்டு பார்க்கும் போது இக்கோயில் பாண்டிய மன்னரின் பள்ளி படைக் கோயிலாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இன்றைய சமுதாய மக்களுக்குப் பயன்படும் வகையில் இக்கோயிலின் வரலாறு, கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை பற்றி அறிவதற்கும், இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட கொடைகள், இவ்வூரில் பெண்களுக்கு அளித்த முக்கியத்துவம், அக்கால மக்களின் வாழ்க்கை முறை, இறைப்பற்று, பல்வேறு மன்னர்கள் இக்கோயிலுக்கு புரிந்த இறைபணிகள், கோயிலை மையப்படுத்தி மக்களின் வேளாண்மை வசதிக்காக அமைக்கப்பட்ட கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் போன்றவற்றை எடுத்துரைக்கும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

1. நற்றிணை பாடல் – 105,228.

<u>துணை நூற்பட்டியல்</u>


1. அறிவொளி.கு.இராமேஸ்வரம் தலவரலாறு,சென்னை,1984.
2. ஆறுமுகம் பிள்ளை கு.உத்தரகோசமங்கை தலபுராணம்,இராமநாதபுரம்,1959.
3. சதாசிவபண்டரத்தார்.தி.வை.பாண்டியர் வரலாறு,சென்னை,2008.
4. சீனிவாசன்.கே.ஆர்.தென்னிந்திய கோயில்கள்,புதுடெல்லி,1916.
5. நற்றிணை பாடல் 105.
6. A.R.E -19114
7. Sowndarajan. K.V. Family Pandiya, Muthanya Irukkanel Architecture,Varanasi-1967.
8. Gopinatha Rao. T.A. -Element of Hindu Iconography - P - 74
   Vol II ,Calcutta-1978.